1967 ஜூன் 23]

திரு. நா. காசிராமன் : கும்பகோணத்திலிருந்து பண்ருட்டி வழியாக சென்னைக்கு பஸ் விட்டால் தூரமும் குறையும், கட்டணமும் குறையும். ஆகையால் அந்த வழியாக பஸ் விடுவதற்கு யோசிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனிக்கேள்வி போடவும்.

அரசாங்க பஸ்கள் விற்பனை

*48 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான பஸ்கள் சமீபத்தில் விற்பனைச் செய்யப்பட்டனவா?

(இ) ஆம் எனில், எத்தனை பஸ்கள், எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் திங்களில் 36 பஸ்கள் ரூ. 3,84,872-க்கு விற்கப்பட்டன.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த பஸ்களை விற்பனை செய்கின்ற காலத்தில் டெண்டர் கால்பார் செய்து விற்பனை செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகளெல்லாம் ஏலத்தில் விடப்படுகின்றன. வண்டியினுடைய விலையை நிர்ணயித்து அதற்குமேலே அதிகமாக ஏலம் கேட்பவர்களுக்கு விற்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பஸ்களை விற்பனை செய்வதற்கு உரியவை என்று தீர்மானிப்பதற்குத் தனி அதிகாரி இருக்கிறாரா அல்லது ஏதாவது குழு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது தனி அதிகாரிதான் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

திரு. க. ந. இராமச்சந்திரன் : இப்போதும் அரசாங்க பஸ்களை விற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதா? ஏற்கனவே விற்பனையான பஸ்கள் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவசியம் ஏற்படும்போது பஸ்கள் பழுதாகிவிட்டால் அவைகள் ஏலத்திற்கு விடப்படுகின்றன.

THIRU T. MARTIN : Mr. Speaker, may I request the Hon. Minister for Transport to state whether two Government buses were sold to Swamy Motor Service, Tanjore with brand new tyres?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மொத்தம் 36 பேர்கள் இருக்கிறார்கள். அவைகளிலே சாமி மோட்டார் பஸ் சர்விஸ்ஸும் ஒன்றாக இருக்கிறது.

திரு. முனு. ஆதி : பஸ்களை எல்லாம் 5 ஆண்டுகள் வரை வைத்திருந்து தள்ளிவிடலாமா என்றிருக்கிறது. சர்வீஸ் டைம் கூடுதலாகக் கொடுத்து ஏலம் விடலாம். ஏன் அப்படிச்செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லேலண்ட் பஸ்ஸின் உழைப்புக் காலம் 5 ஆண்டுகள். பென்ஸுக்கு 5 ஆண்டுகள், பார்கோவிற்கு உழைக்கும் காலம் 4 ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. லேலண்ட் பஸ்ஸுக்கும் பென்ஸ் பஸ்ஸுக்கும் உழைக்கும் காலத்தை 6 ஆண்டு காலமாகவும் பார்கோவிற்கு 5 ஆண்டு காலமாகவும் நிர்ணயிக்க யோசனை இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஏலத்திற்கு விடுவதற்கு முன்பு பத்திரிகைகளில் விளம்பரம் செய்து பிறகு ஏலத்தில் விடுவது நல்லதல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சென்ற அரசு கையாண்ட முறையை ஒட்டிதான் செயலாற்றப்படுகிறது. இனிமேல் அங்கத்தினர் அவர்களுடைய யோசனைப்படியும் கவனிக்கப்படும்.

திரு. கே. கேசவலு : தனியார் துறையிலே வேலை செய்கின்ற டிரைவர்களும் கண்டக்டர்களும் இருக்கிறார்கள். தனியார் பஸ்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் அவர்களையும் எடுத்துக் கொள்ள உத்தேசம் இருக்கிறதா?

(பதில் இல்லை).

திரு. பி. ஜயபால் : தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவில் யார் யாருக்கு பஸ் விற்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெரிய பட்டியல் இருக்கிறது. படிக்கவேண்டுமென்றால் படிக்கிறேன்.

8—3—1967	..	என். பி. அர்த்தநாரி	.. நாமக்கல், சேலம்.
		ஆர். எஸ். முத்துசாமி	.. அய்யம்பேட்டை, தஞ்சாவூர்.
		டி. கருப்பசாமி	.. சென்னை.
		எஸ். சண்முகம்	.. சென்னை.
		சி. வாசு	.. சென்னை.
		எ. தண்டபாணி	.. சென்னை.
		டி. கருப்பசாமி	.. சென்னை.
		பாண்டியன்	.. சென்னை.
		கே. கருப்பண்ணன்	.. சென்னை.

8—3—1967— தொடர்ச்சி.	ஏ. வெங்கடேசன் ..	சென்னை
	ஆர். எஸ். முத்துசாமி ..	அய்யம்பேட்டை, தஞ்சாவூர்
	டி. செல்வராஜ், சுவாமி மோட்டார் டிரான்ஸ் போர்ட்.	தஞ்சாவூர்
	ஆர். வரதராஜன், ஜெய விலாஸ் மோட்டார் சர்வீஸ்.	தஞ்சாவூர்
	ரங்கம் செட்டியார் ..	சென்னை
18—3—1967 ..	லக்ஷ்மி அண்டு கம்பெனி	ஆரணி
	ஏ. எம். நஜீம் ..	சென்னை
	வி. பி. சாமி ..	சென்னை
	நரசிம்மம் ..	சென்னை
	பி. கே. டிரேடர்ஸ் .. முதலிய 36 பேர்கள்	பம்பாய்

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, முன்பு இருந்த அரசு முதலாளிகளுக்குச் சலுகை காட்டி பஸ்களை விற்றதாகப் புகார் இருந்ததே, அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் பகிரங்கமாக விளம்பரம் செய்து விற்பனை செய்யலாம் என்பது யோசிக்கப்படும். அப்போது பஸ் முதலாளிகள் ஒன்று சேர்ந்து முன்கூட்டியே பேசிவைத்து ஏலம் எடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். அதைத் தவிர்ப்பதற்கு வழி செய்யப்படும்.

திரு. என். சங்கரய்யா: இந்த அரசாங்கம் பஸ் ஒன்றை வாங்கிய விலையில் இப்போது ஏலத்தில் விற்கப்பட்ட விலை உத்தேசமாக எவ்வளவு சதவிகிதம் இருக்கும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உதாரணமாக ஒரு பஸ் 30,000 ரூபாய் மதிப்பீடு போடப்பட்டு ஏலத்தில் கொடுக்கலாம். அது 31,000 ரூபாய்க்கு போயிருக்கிறது. சில 10,000 ரூபாய் என்றால் 9,500 ரூபாய்க்கு போயிருக்கிறது. ஒன்று 30,000-க்கு போயிருக்கிறது, ஒன்று 7,000-க்கு போயிருக்கிறது, ஒன்று 9,100 ரூபாய்க்கு போயிருக்கிறது. ஆகவே, மொத்தத்தில் சதவிகிதம் என்ன என்று சொல்லமுடியாது.

திரு. ஆர். நாகசுந்தரம்: ஐயா, இந்த அவைச்சாவை வந்த பிறகு ஸ்டேட் பஸ்களில் லாபமா, நஷ்டமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வருமானம் அதிகம். லாப நஷ்டக் கணக்கு பார்க்கவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இதில் லேலண்ட் அதிக விலைக்குப் போகிறதா, அல்லது பென்ஸ் அதிக விலைக்குப் போகிறதா? லேலண்ட் கூடுதல் விலைக்குப் போனால் அதை வாங்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டு வகை பஸ்களும் ஏறத்தாழ நல்ல விலைக்குப் போகிறது.

திரு. கே. விநயகம் : ஏலத்தில் விடப்பட்ட இந்த பஸ்களின் மொத்தத்தொகை இவ்வளவுதான் இருக்கவேண்டும் என்று மதிப்பீடு இருக்கவேண்டும். ஏலத்தில் எடுத்ததில் அரசாங்கத்திற்கு நஷ்டம் வந்திருக்கிறதா? அல்லது லாபம் வந்திருக்கிறதா? நஷ்டம் வந்திருந்தால் போன சர்க்காரைப் பற்றி ஏதாவது குறை சொல்லலாம், நஷ்டம் இல்லை என்று சொன்னால் சர்க்கார் நேர்மையாக நடந்தது என்று எடுத்து பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போன அரசாங்கம் நடத்திய ஏலங்கள் பற்றி இன்னும் விசாரணை நடைபெறவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஏலத்தில் விடக்கூடிய பஸ்களை கல்வி நிறுவனங்களுக்கு சலுகை காட்டி கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யோசிக்கப்படும்.

இலஞ்ச ஊழல்கள்

***53 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இம்மாநிலத்தில் இலஞ்ச ஊழல்களை விசாரிக்க 'தனி நிறுவனம்' (Independent Body) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்த அரசுக்கு இனிமேலாவது அப்படி அமைக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இதுபற்றி விரிவான முறையிலே மத்திய அரசாங்கத்திலே 'ஆம்புட்ஸ்மன்' என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி எல்லா மாநில அரசாங்கங்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்டிருக்கிறார்கள், அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் ஏதாவது நல்ல அமைப்பு ஏற்படக்கூடும்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்: சதாசார் சமிதி என்று எல்லா ஜில்லாக்களிலும் ஏற்படுத்தப்பட்டது என்னவாயிற்று? அதில் உள்ளவர்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். தற்போதுள்ள விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டில் போலீஸ் அதிகாரிகளே இருப்பதால் இலஞ்ச ஊழலில் ஈடுபடுகிற போலீஸ் அதிகாரிகள் தப்பித்துக்கொள்கிறார்கள் என்பது உண்மையா ? அப்படியானால் ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டால் அப்படி ஏற்படுத்தும்போது அதில் உயர்மட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அங்கத்தினர் அவர்களின் கருத்து, இப்போது இருக்கிற அமைப்புகளில் நீதிபதிகள் இல்லை என்ற எண்ணத்தில் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன்.